**செய்தி வெளியீடு எண்: 815** **நாள்: 20.11.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.11.2019) சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனைக்கு நேரில் சென்று, அங்கு சிகிச்சை பெற்றுவரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ச. ராமதாசு அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தார்கள்.

மேலும், அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மயிலாடுதுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கே.பாரதிமோகன் அவர்களையும், வாகன விபத்துக்குள்ளாகி, தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் சென்னை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனையின் பயிற்சி மாணவர் டாக்டர் மகேஸ்வரன் ஆகியோரையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**